1979 பிப்ரவரி 12]

தமிழ்நாட்டில் தற்பொழுது கொடைக்கானலில் வாணிக நோக்கத்துடன் ஆப்பிள் பழ மரங்கள் வளர்க்கப்படுகின்றன. தற்போது அப்பகுதியில் ஆப்பிள் மரங்கள் வீட்டுத் தோட்டங்களிலும் சிறு நிலப் பகுதிகளிலும் வளர்க்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் சுமார் 10 ஹெக்டேர் அளவுள்ள நிலப்பரப்பில் ஆப்பிள் சாகுபடி செய்யப்படுகிறது.

கொடைக்கானல் பகுதியில் பார்லின்ஸ் பியூடி என்னும் இரகம் முக்கிய இரகமாகும். நீலகிரியில் ரோம் பியூடி என்னும் இரகம் தான் அதிக அளவில் வளர்க்கப்படுகிறது. மற்ற இரகங்களான கேரிங்டன், ஐரிஷ் பீச், கொடைக்கானல் 1 போன்றவைகளும் சிறிய அளவில் வளர்க்கப்பட்டு வருகின்றன.

இணைப்பு XV

[........288-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 459-க்கான விடையைக் காண்க].

விடை :—ஆம்.

தமிழ் நாட்டில் தரம்மிகுந்த பழச் செடிகளை உற்பத்தி செய்து, பயிரிடுவோர்க்கு தக்க காலத்தில் வழங்கும் நோக்குடன் 10 அரசு பழப் பண்ணைகள் இயங்கி வருகின்றன. இப்பழப் பண்ணைகளில் மாங்கன்றுகள் ஒட்டு முறையில் தயார் செய்யப் பட்டு வழங்கப்படுகின்றன. நடப்பு 1978–79-ம் ஆண்டில் 1,82,000 மாஞ்செடிகளை உற்பத்தி செய்து பயிரிடுவோர்க்கு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

2. இவை தவிர புதுக்கோட்டை மாவட்டத்தில் வெம்பன் என்ற இடத்தில் ஏறத்தாழ 1,000 ஏக்கர் பரப்பளவில் பெரிய அளவில் பழப்பண்ணை ஒன்று நிறுவப்பட்டுள்ளது. இப்பண்ணையின் பெரும் பகுதியில் 'மா' சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இதுவரை 43,000 மாங்கன்றுகள் நடப்பட்டுள்ளன. நீலம், பங்களூரா, பங்கனப்பள்ளி, செந்தூரா, பீத்தர், போன்ற உயர் ரகங்கள் ஒட்டுமுறையில் பயிரிடப்பட்டுள்ளன. இதே மாவட்டத்தில் குடுமியான் மலையில் ஒரு பழ ஆராய்ச்சிப் பண்ணை நிறுவப்பட்டு வெப்ப பகுதி பழ வகைகள், குறிப்பாக மாம்பழம் பற்றி ஆராய்ச்சி செய்யப்பட்டு வருகிறது.

3. கன்னியாகுமரி மாவட்டத்தில் கார் கால (off season Mango) மா உற்பத்தி பற்றி ஆராய்ச்சி செய்யும் நோக்கத்துடன் பழ ஆராய்ச்சிப் பண்ணை இயங்கி வருகிறது. இங்கு மாம்பழம் ஆண்டு முழுவதும் கிடைக்க வழி வகை செய்வது பற்றி ஆராயப் படுகிறது.

[1979 பிப்ரவரி 12

4. பழ வளர்ச்சித் திட்டங்களின் மூலம் 1,500 ஏக்கர் பரப்பளவில் புதிய பழப் பண்ணைகள் நிறுவவும், ஏற்கெனவே உள்ள 4,500 ஏக்கர் பரப்பளவில் உள்ள பழப் பண்ணைகளை தக்க முறையில் வளப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

வேளாண்மைத் துறையினால் தொழில் நுணுக்கங்கள் பயிரிடுவோர்க்கு செய்து காண்பிக்கப்படுகிறது.

5. மேற் குறிப்பிட்ட திட்டங்களைத் தவிர, கீழே குறிப்பிட்டுள்ள திட்டங்கள் வாயிலாக பல்வேறு பழச் செடிகள், குறிப்பாக மாஞ்செடிகள் மானிய விலையில் வழங்கப்பட்டு வருகின்றன :

(1) மலைப்பகுதி வளர்ச்சித் திட்டம் (நீலகிரி மலையினைத் தவிர).

(2) அரிசன நலத் திட்டம்.

(3) மலை வாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டம்.

(4) கல்ராயன் மலைப்பகுதி நிர்வாகத்திட்டம்.

(5) 1976—77-ம் ஆண்டு தமிழ் நாட்டில் ஒவ்வொரு மாவட்டத்திலும் மா சாகுபடி செய்யப்பட்டுள்ள பரப்பளவு, உற்பத்தி, ஆகிய விபரங்கள் பின்வருமாறு :—

வரிசை எண்ணும் மாவட்டமும்.	பரப்பு (ஹெக்டேரில்)	உற்பத்தி (டன்னில்)
(1) ..	(2)	(3)
1 செங்கற்பட்டு ..	1,796	13,650
2 தென் ஆற்காடு	1,336	15,360
3 வட ஆற்காடு	3,430	61,740
4 சேலம்	340	5,660
5 தர்மபுரி	9,998	167,970
6 கோயம்புத்தூர்	228	2,170
7 திருச்சிராப்பள்ளி	1,456	17,470
8 புதுக்கோட்டை	396	4,750
9 தஞ்சாவூர்	1,939	22,570
10 மதுரை	8,544	1,46,000

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வரிசை எண்ணும் மாவட்டமும்.	பரப்பு (ஹெக்டேரில்)	உற்பத்தி (டன்னில்)
(1)	(2)	(3)
11 இராமநாதபுரம்	895	8,590
12 திருநெல்வேலி	1,900	27,080
13 நீலகிரி	8	80
14 கன்னியாகுமரி	1,652	28,080
மொத்தம் ..	33,918	5,21,270

இணைப்பு XVI

[......289—ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 461-க்கான விடையைக் காண்க].

1977–78-ம் ஆண்டில் விவசாய நாணயச் சங்கங்களால் மாவட்ட வாரியாக வழங்கப்பட்ட குறுகிய காலக் கடன்களின் விவரம் :—

தொடர் எண்ணும் மத்திய கூட்டுறவு வங்கியின் பெயரும்	கடன் வழங்கப் பட்ட உறுப்பினர் களின் எண்ணிக்கை.	வழங்கப் பட்ட தொகை
(1)	(2)	(3)
		(ரூபாய் இலட்சத்தில்)
1 சேலம்	99,277	1,426·86
2 புதுக்கோட்டை	23,062	345·69
3 காஞ்சிபுரம்	32,945	657·35
4 மதுரை	97,599	1,324·16